# மாலை தீப்பொறி

MALAE THEEPORI



2025 ஜனவரி 16-31 தொகுதி 23 இதழ் 11

விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200



## தோழர் மகேந்திர சிங்கின் 20ம் ஆண்டு நினைவுநாள் பொதுக்கூட்டம்!

# தோழர் மகேந்திர சிங்கின் 20ம்_ஆண்டு நினைவுநாள்!



ஜார்கண்ட் மாநிலத்தின் மாலெ கட்சியின் மகத்தான தலைவர், தோழர் மகேந்திர சிங்
ஜார்கண்ட் மக்களின் பெருவிருப்பங்களை நிறைவேற்றும் போராட்டத்தில் தனது வாழ்க்கையை, உயிரைத் தியாகம் செய்தார். அவரது வீரஞ்செறிந்த மரபு, ஒருபுறம் மக்களுக்கு தொடர்ந்து உத்வேகமளிக்கிறது, மற்றொருபுறம் பாசிஸ்டுகளை அச்சுறுத்துகிறது.

தோழர். மகேந்திரசிங் தியாகியானதன் 20வது ஆண்டு இன்று, சனவரி 16 ல், பகோதரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டனர்.

¶ தோழர் மகேந்திர சிங், நீங்கள் எப்போதும் ஜார்கண்ட் மற்றும் இந்திய மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் போராட்டங்ககளில் வாழ்வீர்கள்!

¶ செவ்வணக்கம், தோழர்!



தோழர் மகேந்திர சிங், ஜார்கண்ட் மக்களின் பெருவிருப்பங்களை நிறைவேற்றும் போராட்டத்தில் தனது வாழ்க்கையை தியாகம் செய்தார். அவரது வீரஞ்செறிந்த மரபு தொடர்ந்து மக்களுக்கு உத்வேகமளிக்கிறது, பாசிஸ்டுகளை அச்சுறுத்துகிறது. மகேந்திரசிங் தியாகியானதன் 20வது ஆண்டு (ஜனவரி 16), அவரது லட்சியத்தை முன்னெடுத்துச் செல்ல நம்மை அழைத்துச் செல்கிறது. அழியாப்புகழ்பெற்ற தியாகி மகேந்திர சிங்கிற்கு செவ்வணக்கம்!

திபங்கர்
பொதுச் செயலாளர்
இகக(மாலெ)



மாலை தீப்பொறி

இருவார இதழ்
*2025 ஜனவரி 16 - 31*
தொகுதி 23 இதழ் 11

முதன்மை ஆசிரியர்
**சங்கர் .வீ**

ஆசிரியர்
**ஜி. ரமேஷ்**

ஆசிரியர்குழு
**பழ. ஆசைத்தம்பி**
**பாலசுந்தரம்**
**அ. சந்திரமோகன்**
**கே. ஜி. தேசிகன்**

மேலாளர்
**சொ. இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

**தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

**நிர்வாக அலுவலகம்**
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# பல்கலைக் கழகங்களைச் சிதைத்து மாநில உரிமைகளைப் பறிக்கும் மோடி அரசு

பாசிசம் தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்த அடிப்படையையே மாற்றும். அதற்காக அவை கல்வித் திட்டத்தை, கல்வி நிலையங்களை, நூலகங்களை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதை முதன்மையான நடவடிக்கையாக மாற்றும். ஒருபுறம் கலாச்சாரம், பண்பாடு என்று பேசிக் கொண்டு இந்தியாவின் சரித்திரத்தை இந்துத்துவாவின் சரித்திரமாக மாற்றும் வேலையை ஏற்கனவே தொடங்கிவிட்ட ஆர்எஸ்எஸ் – பாஜக, கல்வியை காவிமயமாக்கவும் கார்ப்பரேட்மயமாக்கவும் புதிய தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டுவந்து எல்லா மாநிலங்களிலும் அதை நேரடியாகவும் மறைமுகமாகவும் திணித்துக் கொண்டிருக்கிறது. நீட், கேட் தேர்வுகள் எனக் கொண்டுவந்து ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்விக் கனவை காலி செய்து கொண்டிருக்கும் பாஜக அரசு, தற்போது பல்கலைக் கழகங்களைச் சிதைக்கவும் அதன் மூலம் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் திட்டத்தை பல்கலைக் கழகங்களின் மானியக்குழுவின் (யுஜிசி) வாயிலாகத் தொடங்கியிருக்கிறது. பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர் நியமனம் மாநில அரசால் பரிந்துரைக்கப்படுபவரை அம் மாநிலத்தின் ஆளுநர் நியமிப்பார். ஆனால், தற்போது பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர் நியமனத்திற்கான தேடல் குழுவை வேந்தரான ஆளுநரே முடிவு செய்வார் என்றும் ஆளுநர் பரிந்துரைப்பவரே தேடல் குழுவின் தலைவராக இருப்பார் என்றும் யுஜிசி மற்றும் பல்கலைக் கழக உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படுபவர்களே உறுப்பினர்களாக முடியும் என்றும் புதிய விதிகளை யுஜிசி வெளியிட்டுள்ளது. பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை மதிக்காமல் ஆளுநர்களின் அடாவடிச் செயல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி இதற்கு சிறந்த உதாரணம். ஆர்எஸ்எஸ்காரரான ஆர். என்.ரவியால் பல்கலைக் கழக துணைவேந்தர்களாக யார் நியமிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் அதிகாரத்தைப் பறித்து ஒரு தனி நபருக்கு ஒரு மாநிலத்தின் உயர் கல்வியின் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் வழங்குகிறது இந்த விதிகள். இவை ஜனநாயகத்திற்கு விரோதமானது என்பது மட்டுல்ல, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கே எதிரானதாகும். அரசமைப்புக்கு விரோதமாக ஒரு திட்டத்தை ஒன்றிய அரசின் கீழ் உள்ள பல்கலைக் கழக மானியக் குழு போட்டுவிட்டு, அந்தத் திட்டத்தை அமல்படுத்தாத மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள் யுஜிசியின் திட்டங்களால் பயன்பெற முடியாது என்று அராஜகமாக அறிவித்துள்ளது. சங்கிகளைத்

தொடர்ச்சி 19 ம் பக்கம்...

# முதலமைச்சர் ஸ்டாலினை துரத்தும் திமுக தேர்தல் வாக்குறுதிகள்



**பாலசுந்தரம்**

பதினெட்டு மாதங்களுக்கு முன்பே தேர்தல் தயாரிப்புகள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன. 2019 முதல் அனைத்து தேர்தல்களிலும் வெற்றி ஈட்டிய ஸ்டாலின், தொடர்ந்து இரண்டாவது முறையாக திமுகவை ஆட்சிக்கட்டிலில் ஏற்றவேண்டிய சவாலை சுமக்கிறார். தோல்வியை தொடர்ந்து சுவைத்து வரும் அதிமுக, வெற்றி பெறாவிட்டால் எதிர்காலம் கேள்விக்குறி என்ற நெருக்கடியை எடப்பாடி சுமக்கிறார்! சட்டையை கழட்டிக்கொண்டு சாட்டையால் அடித்துக்கொள்ளும் பாஜக தலைவர் அண்ணாமலை, இது வெறும் டீசர்தான், போகப்போக இன்னும் தெரியும் என்று அச்சுறுத்துகிறார்!! மற்ற கட்சிகளும் தங்களுக்கே உரிய வகையில் தேர்தலை நோக்கி செயல்படத் தொடங்கியுள்ளன.

2026 தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி என்ற இலக்குடன் இறங்கியுள்ள திமுக, “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்” என்ற வழக்கமான முழக்கத்துடன் 2021 தேர்தலில், தமிழ்நாடு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதா? திமுகவின் தேர்தல் அறிக்கையில் 90 விழுக்காடு நிறைவேற்றப்பட்டு விட்டதாக திமுகவின் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஆ. ராசா சொல்லியிருந்தார். ஆனால் முதலமைச்சர் ஸ்டாலின் 100 விழுக்காடு நிறைவேற்றிவிட்டதாக சொல்லிவிட்டார்.

1952 தேர்தல் முதல் தேர்தல் அறிக்கை வெளியிடுவதை வழக்கமாக கொண்டிருக்கும் திமுக, தேர்தல் அறிக்கை மக்களது விருப்பமாக அதை வெளியிட்டு வருவதாகவும் சொல்லிவருகிறது. 2021 தேர்தலில், 63 தலைப்புகளில், 505 வாக்குறுதிகளை அளித்துள்ள தேர்தல் அறிக்கை, அதற்கென்று அமைக்கப்பட்ட தேர்தல் குழுவால் விரிவான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. குழுவின் ’கூர்த்த அறிவுக்கும்,.. குறைவிலா உழைப்புக்கும்” மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்திருப்பதற்கேற்ப குழு விரிவாக வேலை செய்திருக்கிறது.

73 பக்கங்கள், 63 தலைப்புகளில் 505 வாக்குறுதிகளுக்குக் கூடுதலாக, தேர்தலுக்கு முன்பாகவே திமுக தலைவர் ஸ்டாலின் திருச்சியில் அளித்த 7 வாக்குறுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. பத்தாண்டுகளுக்கான உறுதிமொழிகள் அவை. அதிமுகவை ஆட்சியிலிருந்து அகற்றி, மக்கள் திமுகவை அதிகாரத்தில் அமரவைத்ததற்கு தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன் என்று திமுகவினர் சொல்லிக் கொண்டார்கள். உண்மைதான். திமுக தேர்தல் அறிக்கையில் சொல்லியிருப்பது போல, “7 ஆண்டு கால பாஜக ஆட்சி, 10 ஆண்டுகால அதிமுக ஆட்சி” ஏற்படுத்திய மக்கள் விரோத ஆட்சிமுறையால் ஏற்பட்ட மக்கள் எதிர்ப்புணர்வை, தேர்தல் அறிக்கையால் அலையாக எழுந்ததில் பயணம் செய்து திமுக ஆட்சியைப் பிடித்தது. இத்தகைய வெற்றிக்கு காரணமான திமுக தேர்தல் அறிக்கை திரு. ஆ. ராசா சொல்வதுபோல தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதா 4 ஆண்டுகால திமுக ஆட்சி? இதற்குள் செல்வதற்கு தோதாக, ஸ்டாலின் அளித்த 7 உறுதிமொழிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பொருளாதாரம், வேளாண்மை, நீர்வளம், கல்வி, மருத்துவம், நகர்ப்புர வளர்ச்சி, ஊரக கட்டமைப்பு, சமூகநீதி ஆகிய 7 உறுதிமொழிகளை அடிப்படையாகக் கொண்டே தேர்தல் அறிக்கை உள்ளது. இந்த உறுதிமொழி 10 ஆண்டுகளுக்கானது. 5 ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் திமுக ஆட்சி, 50 விழுக்காட்டை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

ஆனால், தொழிலாளர், விவசாயிகள், அரசு ஊழியர்கள், சாமான்ய மக்கள், இன்னும் பல பிரிவினரும் திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளை நினைவுபடுத்தி, நிறைவேற்ற வலியுறுத்தி குரலெழுப்பி வருகின்றனர், போராடி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் நீண்டகால, உடனடி

பிரச்சனைகள் பற்றி தேர்தல் அறிக்கை பேசுகிறது. ஒவ்வொன்றுக்கும் வாக்குறுதி அளிக்கிறது. ஒவ்வொரு மக்கள் பிரிவினர் பற்றியும் பேசுகிறது. அந்த ஒவ்வொரு பிரிவினருக்கும் வாக்குறுதி அளிக்கிறது. அந்த வகையில், அறிக்கை அனைத்து அம்சங்களையும் பிரச்சனைகளையும் தழுவிய ஒரு அரசியல் அறிக்கை என்று கூறலாம். அனைத்து மக்கள் பிரிவினரையும் கவனத்தில் கொள்கிற ஒரு அறிக்கை என்று கூறலாம்.

தேர்தல்களில், போட்டி மிகுந்த மக்கள் மயக்கு திட்டங்களுடன் கட்சிகள் வருவது இப்போது வாடிக்கையாகி விட்டது. அந்த நோக்கம் திமுக தேர்தல் அறிக்கைக்கும் உண்டு. அதேசமயம், 70 ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியில் பொருளாதாரம், அரசியல், கலை இலக்கியம், பண்பாடு, மொழி, சமூக நீதி என விரிவான சமூக, அரசியல் அறிக்கையாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது. 16 மாதங்களில் 70 விழுக்காடு வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டதாக 2022 செப்டம்பரில் திமுகவினர் பேசிக்கொண்டிருக்க, முதலமைச்சர் ஸ்டாலின், 99 விழுக்காடு தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுவிட்டதாக செப்டம்பர் 13ல் கூறியிருந்தார். செப்டம்பர் 15 அன்று வழங்கப்பட உள்ள கலைஞர் மகளிர் உரிமைத்தொகையோடு 100 விழுக்காடு வாக்குறுதிகள் நிறைவேறிவிடும் என்றும் கூறியிருந்தார். ஆனால் வெறும் 10 விழுக்காடு வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஏப்ரல் 2024ல் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கூறியிருக்கிறார்.

வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டோம் என்று திமுக கூறிக்கொண்டாலும் அதிமுக ஆட்சி விட்டுச் சென்ற 9 லட்சம் கோடி கடன் சுமை, மாநில அரசு திட்டங்களை செயல்படுத்த முடியாமல் பொருளாதார முட்டுக்கட்டை போட்டு, திமுக அரசுடன் வன்மம் பாராட்டும் ஒன்றிய அரசு என இந்த இரண்டு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் திமுக தலைவர்கள் கூறிவருகின்றனர். 13-01-2025ல் இந்து (ஆங்கிலம்) நாளிதழில் வெளிவந்துள்ள திமுக அமைச்சரவையின் இரண்டாவது நிதி அமைச்சர் தங்கம். தென்னரசு பேட்டியிலும் இதைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால் திமுகவின் தேர்தல் அறிக்கை, ஊழல் ஒழிப்பு, உற்பத்தி பெருக்கம், நிதி நிர்வாகம், ஆடம்பர செலவினங்கள் ஒழிப்பு, மேம்பட்ட வரி வருவாய் இவற்றின் மூலமாக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நிதியை திரட்டமுடியுமென்று அழுத்தமாக கூறியதை திரு. தங்கம் தென்னரசு அறியமாட்டாரா? கூடுதலாக, நலத்திட்ட செலவினங்களையும் விவேகமான நிதி மேலாண்மையையும் சமன் செய்து வருவதாகவும் கூறியுள்ளார். இதன் பொருள் எந்த அளவுக்கு செலவு செய்யப்படுகிறதோ அந்த அளவுக்கு அரசுக்கு வருவாயும் கொண்டு வரப்படுகிறது என்பதே பொருள். ஜிஎஸ்டி வரி வருவாய், டாஸ்மாக் விலை உயர்வு, சொத்து வரி உயர்வு, அதிகரித்துள்ள பத்திரப்பதிவு வருமானம், பெரும் எண்ணிக்கையில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளை உருவாக்கி மக்களிடம் அதிக வரி வசூல் விதிப்பு ஆகிய முறைகளில் அரசு வருவாய் ஈட்டி வருகிறது.

ஆனாலும் திமுக அறிவித்த பல முக்கியமான வாக்குறுதிகள் முதலமைச்சர் ஸ்டாலினை துரத்திக்கொண்டிருக்கின்றன. அரசுப்பணிகளில் 3 லட்சம் காலிப்பணியிடங்களை நிரப்புவது, ஆண்டுதோறும் புதிதாக 50 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, போக்குவரத்து தொழிலாளருக்கு அளித்த வாக்குறுதிகள், தூய்மைப்பணியாளர்களுக்கு அளித்த பணி, சம்பளம், ஓய்வூதியம் தொடர்பான வாக்குறுதிகள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர், ஆசிரியர்கள், சாலைப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள், புதிய ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக மீண்டும் பழைய ஓய்வூதியத்திட்ட வாக்குறுதி, (நிதி அமைச்சர், தென்னரசு மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம் பற்றி பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்!) இதுபோன்ற இன்னும் பல அடிப்படையான கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருகின்றனர். 1996, 2006ல் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியதைப்போலவே இந்த தேர்தல் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை அளித்த 2021 திமுக தேர்தல் அறிக்கை, கேள்விகளையும், போராட்டங்களையும் எதிர்கொள்கிறது.

விசிக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் ஏற்பட்ட உரசல்கள் உருவாக்கிய பரபரப்புகள் அடங்கியுள்ளன. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் காங்கிரஸ், திமுகவுக்கு வழிவிட்டுவிட்டது. ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு புகழ் வெற்றிக் கழகம், அதிமுக, பாஜக இவர்களது கூட்டாளிகளும் போட்டியிலிருந்து விலகிக் கொள்ள திமுக வெற்றி உற்சாகத்தில் இருக்கிறது. ஆனால், 2026 தேர்தலில் 2021ன் வாக்குறுதிகள் பின்துரத்துவது உறுதி.

# டிரம்ப் 2.0; மோடி 3.0:




**தமிழில் செந்தில்**

கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக, இந்திய வெளியுறவுக் கொள்கை அமெரிக்க முன்னுரிமைகளோடு ஒன்றிப்போகிறது. இது பொதுவாக, இந்திய-அமெரிக்க நீண்டகால ஒத்துழைப்பு என சித்தரிக்கப்படுகிறது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி, நேருவிய அணிசேரா சகாப்தத்தின் முடிவிற்கு சமிக்ஞையாகியது. அது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான கூட்டணியில் புதிய கட்டத்தை முன்னறிவித்தது. தாராளமயமாக்க, தனியார்மயமாக்க, உலகமயமாக்க கொள்கைகளை புதுதில்லி ஏற்றுக்கொண்டதன் மூலம் பொருளாதார தளத்தில் இந்திய-அமெரிக்க உறவுகள் உறுதி பெற்றன. அதேவேளையில் இஸ்லாமிய வெறுப்பு 'பயங்கரவாதத்தின் மீதான போரில்' வாஷிங்டன் ஈடுபட்டதும், சீனாவை கட்டுப்படுத்துவது என்ற அது புதிதாக அடையாளம் கண்ட அதன் நீண்டகால மிக முக்கிய இலக்கும், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை கணக்கீடுகளில், மண்டல அளவிலும் உலகளாவிய அளவிலும் அமெரிக்காவின் கூட்டாளி எனும் இந்தியாவின் பொருத்தப்பாட்டை அதிகரிக்கச் செய்தது. இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் மிகவும் கவனிக்கத்தக்க இராணுவ பரிமாணத்தைக் கொண்டு வந்தது. அண்மைய ஆண்டுகளில் இஸ்ரேலுடன் அதிகரித்துவரும் இந்தியாவின் நெருக்கம், அமெரிக்க தலைமையிலான உலக ஒழுங்குடன் எப்போதும் அதிகரித்துக் கொண்டே செல்லும் நாட்டின் ஒன்றிணைப்பை வலுவூட்டி வருகிறது; விரைவு படுத்தியும் வருகிறது.

2014 இல் இந்தியாவில் நரேந்திர மோடி அதிகாரத்திற்கு வந்ததும் அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப்பின் எழுச்சியும், இந்திய-அமெரிக்க ஒத்துழைப்பைச் செலுத்துவதற்கான அரசியல்-பொருளாதார இயங்காற்றலுக்கு கூடுதலான கருத்தியல் உந்துதலையும் வழங்கியது. டிரம்ப்பும், மோடியும் அவர்களுக்கு முன்பிருந்தவர்களைக் காட்டிலும் கூடுதல் ஒத்தத் தன்மையைக் கொண்டுள்ளனர். மேலும் மோடி-டிரம்ப் நட்புறவு குறித்த களிப்புணர்வு வழக்கமான சர்வதேச ராஜதந்திர எல்லைகளையும் தாண்டி, உள்நாட்டு அரசியல் பரப்புகளிலும் சிந்தி சிதறியது. ஹவ்டி மோடி (எப்படி இருக்கிறீர்கள் மோடி), நமஸ்தே டிரம்ப் (வணக்கம் டிரம்ப்) போன்ற கண்காட்சிகள் வழக்கமான நடைமுறைகளாக மாறிவிட்டன. 2020 அமெரிக்க குடியரசுத் தேர்தலில் டிரம்ப்புக்கு ஆதரவாக இந்தியப் பிரதமர், பரப்புரை செய்யுமளவுக்குச் சென்றார். இருப்பினும் எதிர்பார்த்த மாதிரி டிரம்ப் வெற்றி பெற முடியவில்லை. அடுத்த நான்காண்டுகளுக்கு அதிபர் பைடனுடன் மோடி செயல்பட வேண்டி வந்தது. 20,000 டாலர் ( சுமார் ரூ 17 லட்சம்) மதிப்பு கொண்ட விலை உயர்ந்த வைர பரிசை பைடன் குடும்பம் பெற்றுள்ளது. இதை

வழங்கியது, வேறு யாருமல்ல, மோடி தான் என்பது அமெரிக்க பதிவுகளில் இருந்து நமக்கு தெரிய வருகிறது.

அமெரிக்காவில் அரசியல் தற்போது ஒரு முழுச் சுற்றை எட்டி விட்டது. டிரம்ப் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழுக்காக நரேந்திர மோடி தீவிரமாக காத்துக் கொண்டிருக்கிறார் என்பது தெரிகிறது. டிரம்ப், மோடிக்கு அழைப்பு விடுக்கலாம், விடுக்காமலும் போகலாம். ஆனால், இந்திய-அமெரிக்க இருதரப்பு உறவுகளில் அதிகரித்து வரும் பதட்டங்களுக்கு பல்வேறு முக்கிய விசயங்கள் உள்ளன. தடுமாறிக் கொண்டிருக்கும் மோடி அரசாங்கம் வம்புச் சண்டைக்கு போகும் அதிபர் டிரம்ப்பை இந்த விசயங்களில் சமாளித்தாக வேண்டும். ஆனால் மோடி, டிரம்ப் இருவருமே தங்களது அரசியல் வாழ்வை அதிதீவிர தேசியவாத தளங்களிலேயே கட்டியுள்ளனர். எவ்வாறாயினும் அமெரிக்காவுக்கு நீண்டகாலக் கூட்டாளியாக இந்தியா தேவைப்படலாம். ஆயினும் நலன்கள்

மோதும் போது அமெரிக்க அதிதீவிர தேசியவாதம் தனக்கான பங்கைப் பெற நிச்சயமாக வலியுறுத்தும். அமெரிக்காவுடன் இந்தியாவின் தொடரும் வர்த்தக உபரி முதல், அமெரிக்க திறன்மிகு வேலைகளுக்கான சந்தையில் அந்நிய விண்ணப்பதாரர்களில் இந்தியர்கள் முன்னுரிமை பெறுவது வரை, மோதலின் ஒவ்வொரு விஷயத்திலும் மோடி அரசாங்கத்திடமிருந்து ட்ரம்ப் அரசாங்கம் பெரும் சலுகைகளை நிச்சயமாகக் கேட்கும்.

அண்மைய ஆண்டுகளில், அமெரிக்கா, சீனாவுடன் ஒப்பிடும் போது இந்தியாவின் வர்த்தக உறவுகள் மிகவும் சமச்சீரற்றதாக மாறியுள்ளது. மிகவும் அண்மைய தகவல்களை எடுத்துக் கொண்டால் 2024 இல் இந்தியா அமெரிக்காவுடன் $3,530 கோடி வர்த்தக உபரியைக் கொண்டிருந்தது. அதேவேளையில் சீனாவுடன் $8,510 கோடி வர்த்தக பற்றாக்குறையைக் கொண்டிருந்தது. அமெரிக்க பொருள்கள் மீது ‘அதிகப்படியான வரி’ சுமத்துவதாக டிரம்ப் அணியினர் ஏற்கனவே இந்தியாவை குற்றம் சாட்டி வருகின்றனர். ஆகையால் அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும் இந்திய பொருள்கள் மீது அதற்கீடான வரி சுமத்தப்படும் எனவும் அச்சுறுத்துகின்றனர். வர்த்தக வரிகளுக்கும் கூடுதலாக மகா (மீண்டும் மாபெரும்அமெரிக்கா ) எனப்படும் டிரம்ப் கதையாடல், புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான தீய வாய்ச்சவடாலைச் சுற்றிச் சுழலுகிறது. முந்தைய நிகழ்வுகளில் மெக்சிகர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக தனித்துவமாக மேற்கொள்ளப்பட்ட புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான இயக்கம், இந்தமுறை அமெரிக்காவில் ஹெச்-1பி விசா வைத்திருக்கும் திறன்மிகு இந்தியர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் விசயத்திலும் கூட ஒரு முக்கிய பிரச்சனையாக மாறியுள்ளது.

1990 இல், அமெரிக்க முதலாளிகள் திறன்மிகு வேலைகளுக்கு அந்நிய நாட்டவரை வேலைக்கமர்த்த வகைசெய்யும் ஹெச்-1பி விசா திட்டத்தை அமெரிக்க காங்கிரஸ் உருவாக்கியது. 2004 லிருந்து ஒவ்வொரு ஆண்டும் 85,000 புதிய ஹெச்-1பி விசாக்கள் மட்டுமே வழங்கப்படும் எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆனால் விசாக்களை நீட்டிப்பது உள்ளிட்ட, விசாக்களை வைத்திருப்பவர்களுடைய மொத்த எண்ணிக்கை 2022 இல் 4,74,000 ஆகவும் 2023இல் 3,86,000 ஆகவும் சென்றது. இந்த விசாக்களை வைத்திருப்பவர்களில் 70% பேர் இந்தியர்களாக உள்ளனர். சீனத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 12 சதவீதம் என தூரமான இரண்டாவது இடத்தில் உள்ளனர். இந்த திறன்மிகு அந்நிய தொழில்முறையாளர்களுக்கு அமெரிக்க தொழில்முறையாளர்களை விட வழக்கமாகவே குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது. ஆகவே இது அமெரிக்க முதலாளிகளுக்கு ஆதாயம் அளிப்பதாக உள்ளது. என்றபோதிலும் அமெரிக்காவில், பல்வேறு தொழில்களிலும் ஏற்படும் உண்மையான அல்லது உணரப்படுகிற வேலை இழப்புகள், ஊதியக் குறைவு குறித்து அமெரிக்க தொழிலாளர் மத்தியில் விரக்தி வளர்ந்து வருகிறது. இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள மத்தியிலுள்ள பெரும் எண்ணிக்கையிலான பாஜக ஆதரவாளர்கள், டிரம்ப் ஆதரவு நிலைப்பாடு எடுத்தாலும் கூட, வர இருக்கும் நாட்களில், ஏற்கனவே அமெரிக்காவில் குடியேறி இருக்கும் அல்லது அங்கு சென்று குடியேறலாம் என எண்ணம் கொண்டுள்ள இந்திய தொழிலாளர்கள் அமெரிக்காவில் அதிகரித்த அளவிலான பாதகமான சூழலை எதிர்கொள்ள நேரிடும்.

ஆவணங்களற்ற புலம்பெயர்ந்த இந்தியர்கள், இந்தியாவிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவதும் கூட பெரிய அளவில் அதிகரித்துள்ளது. ஏற்கனவே, கிட்டத்தட்ட 18,000 இந்தியர்கள் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாடுதிருப்பும் செயல்முறையில் ‘ஒத்துழையாமை’ இருப்பதாக இந்திய அரசாங்கம் மீது குற்றம் சாட்டப்படுகிறது. டிரம்ப் அவரது முதல் பதவி காலத்தில் 15 லட்சம் பேரை அவர்களது நாட்டிற்கு திரும்பவும் அனுப்பி வைத்தார். அவரது இரண்டாவது பதவி காலத்தில் ஓராண்டுக்கு 10 லட்சம் பேர் வீதம் என்ற பெரும் எண்ணிக்கையில் அந்நிய நாட்டினரை திருப்பிஅனுப்பப் போவதாக பரப்புரையின் போது வாக்களித்துள்ளார். பெரும் எண்ணிக்கையில் புலம் பெயர்ந்தவர்களை கொடூரமாக அவர்கள் நாட்டுக்கு திருப்பியனுப்பும் இயக்கத்தை திட்டமிட, நீதிமன்றத்தின் உதவியை நாடவழிவகை இல்லாத கமுக்கமான, அந்நிய எதிரிகள் சட்டம் 1798 போன்ற போர்க்கால நாடு கடத்தல் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிபர் டிரம்ப்பின் முதல் பதவிக் காலத்தின் முத்திரையாக விளங்கிய இனவெறிவாத சூழ்நிலையில், அரசின் இந்தச் செயல்பாடு சந்தேகத்திற்கிடமின்றி முழுமையடையும், அதிகரிக்கும். டிரம்ப்பின் கீழ் தீவிர வலதுசாரி குடியரசு கட்சியினுடைய நிகழ்ச்சி நிரலின் கருவான அடிப்படையாக இருக்கும்.

அமெரிக்க நீதிமன்றத்தில் உள்ள அதானி வழக்கின் எதிர்காலம், டிரம்ப் நிர்வாகத்துக்கும் மோடி அரசாங்கத்துக்கும் இடையேயான உரசலின் மற்றொரு முக்கிய புள்ளியாக வளர இருக்கிறது. இந்தியாவில் $25 கோடி லஞ்ச முறைகேடு தொடர்பாக கவுதம் அதானி, அவரது கூட்டாளிகளுக்கு எதிரான குற்ற, சிவில் சட்ட

நடவடிக்கைகளும், அது தொடர்புடைய அமெரிக்க ஊழல் தடுப்பு சட்டங்களை மீறியதும் ஒன்றாக இணைக்கப்பட்டு அமெரிக்க மாவட்ட நீதிபதி நிக்கோலஸ் கராஃபிசின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம், நீதிமன்ற நடைமுறையில் எவ்வித தளர்ச்சியும் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை என்பது தெரிய வருகிறது. பல்வேறு நாடுகளில் அதானி குழுமத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டன அல்லது மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. அதானி குழுமத்தின் சர்வதேச தர அளவீடுகளின் வீழ்ச்சியும் உலகச் சந்தையில் நிதிகள் வற்றிப்போனதும் 200 கோடி அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான மதிப்பு கொண்ட அதனுடைய ஒட்டுமொத்த 44% பங்குகளையும் இழந்து, வில்மர் குழுமத்திலிருந்து அதானி குழுமம் ஏற்கனவே விலக வேண்டியதாயிற்று .. இருப்பினும் அதானிக்கு அதிபரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ட்ரம்ப்பிடம் இருக்கிறது. ஆனால் மோடிக்கு காட்டும் அத்தகைய கருணைக்கு மோடி மிகப்பெரிய விலையை நிச்சயமாக கொடுத்தேயாக வேண்டும்.

டிரம்ப்-மோடி நட்புறிமை அல்லது நட்புறிமையின்மை அல்லது அதானி குழுமத்தின் எதிர்காலம் இவற்றைத் தாண்டி ட்ரம்பின் இரண்டாவது பதவிக்கால நகர்வுகள் குறித்து இந்திய மக்கள் நிச்சயமாக கவனமுடன் இருந்தேயாக வேண்டும். இந்தியாவின் பொருளாதார இறையாண்மை, பாதுகாப்பு, உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள இந்தியர்களின் கவுரவம் தொடர்பான உண்மையான பிரச்சனைகள் ஒருபோதும் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. நிச்சயமாக இந்தியாவின் உடனடி, நேரடி நலன்களைத் தாண்டியும் உலக அமைதியை, நீதியை கட்டிக் காப்பதற்கும் நம்முடைய பூமி உயிர்த்திருப்பதற்கும் எப்போதுமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது அடிப்படையானதாகும். டிரம்ப் ஆட்சியதிகாரத்தில் இருக்கும்போது இது மட்டுமே மிகவும் அவசர அவசியமாக முன்வந்திருக்கிறது

# முற்போக்கு மாநிலத்தில் பிற்போக்குச் சட்டங்கள்

**ரமேஷ் கணபதி**

சென்னையில் 1998 ஆம் ஆண்டு ஆட்டோவில் வந்தவர்களால் சரிகா ஷா பாலியல் சீண்டலுக்குள்ளாகி தள்ளிவிடப்பட்டு மரணமடைந்த பின்னணியில் 1998ல் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் தடுப்பு சட்டம் (Tamil Nadu prevention of women harassment act 1998) உருவானது. அதில் பிரிவு 4 தான் பெரும்பாலும் இன்றைக்கும் அனைத்து காவல் நிலையங்களிலும் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களுக்காகப் பதிவு செய்யப்படுகிறது. அந்த பிரிவுக்கு 3 ஆண்டுகள் தண்டனைதான் என்ற போதிலும் அது பிணையில் வெளி வரமுடியாத பிரிவாகத்தான் காவல்துறை ஆரம்பத்தில் பயன்படுத்தி வந்தது. அது மட்டுமின்றி அவர்கள் விருப்பத்திற்கு எவரையும் சிறையிலடைக்கவும் பிணையில் விடாமல் இருக்கவும் மிகவும் மோசமாக இப்பிரிவை அதிகமாகப் பயன்படுத்தி வந்தது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை இப்பிரிவு பிணையில் விடக் கூடியது என்று சொன்னதற்குப் பிறகு காவல்துறையின் அதீதச் செயல் கொஞ்சம் கட்டுக்குள் வந்தது. இப்போது அண்ணா பல்கலைக் கழக மாணவி மீதான கொடுமையைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் ஸ்டாலின் 10.1.2025 அன்று சட்டமன்றத்தில் மேற்படி பிரிவிலான குற்றத்திற்கு தண்டனையை 5 ஆண்டுகள் என்று ஆக்கியும் பிணை கிடையாது என்றும் அபராதத் தொகை ரூ.10,000 என்பதை ஒரு லட்சம் என அதிகரித்தும் திருத்தம் கொண்டு வந்துள்ளார். இந்தப் பிரிவு அனைத்து வகை மின்னணு வடிவங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் தற்போது உள்ளடக்கியுள்ளது. அதேபோல், பாசிச பாஜக கொண்டு வந்துள்ள புதிய குற்றவியல் சட்டங்களான பாரதிய நியாய சங்கிதா (BNS)2023, பாரதிய நகரிக் சுரக்ஷா சங்கிதா (BNSS)2023 ஆகியவற்றில் தமிழ்நாட்டிற்கு ஏற்ற வகையில் திருத்தம் செய்துள்ளது தமிழக அரசு. பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் தண்டனைகளை 14 ஆண்டுகள் என்றும், ஆயுள் காலத் தண்டனை என்றும், மரண தண்டனை என்றும் தண்டனைகளை அதிரிகரித்து மசோதாக்களை தாக்கல் செய்து நிறைவேற்றியுள்ளது தமிழக அரசு. ஏற்கனவே, பல்வேறு பாலியல் குற்றங்களுக்கு, பெண்கள் மீதான வன்முறைக்கு பாஜக அரசின் புதிய

குற்றவியல் சட்டங்களில் மரண தண்டனை வரை வரையறுக்கப்பட்டுள்ளது. பாஜக அரசு கொண்டு வந்துள்ள புதிய குற்றவியல் சட்டங்கள் காவல்துறைக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் மக்களுக்கு எதிரான கொடூரச் சட்டங்கள், அவற்றை ஏற்க முடியாது என்று சொல்லி திராவிட முன்னேற்ற கழகமும் புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், அச் சட்டங்கள் பற்றி ஆராய்ந்து அறிக்கை வழங்க ஒரு நபர் ஆணையத்தையும் திமுக அரசு அமைத்தது. எந்தச் சட்டங்களை மக்களுக்கு எதிரான சட்டங்கள் என திமுக அரசு எதிர்த்ததோ அதே சட்டங்களில் தமிழ்நாட்டிற்கு ஏற்ற வகையில் என்று சொல்லி மரண தண்டனை உட்பட தண்டனைகளை அதிகரித்து பாஜகவின் கொடூரச் சட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது திமுக அரசு. பெண்களைப் பின் தொடர்ந்தால் 5 ஆண்டுகள் வரை சிறை என்கிறது தமிழ்நாட்டின் திருத்தச் சட்டம். தண்டனைகளை அதிகரித்ததால் குற்றங்கள் குறைந்து விட்டன என்பதற்கு இதுவரை எந்தவொரு ஆதாரங்களும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், காவல்துறையினரின் அத்துமீறல்களே அதிகமாக இருக்கின்றன. எது பாலியல் குற்றம், எது பெண்களுக்கு எதிரான செயல் என்பதை காவல்துறையினரே அவர்கள் புரிந்து கொண்ட விதத்தில் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன, பயன்படுத்தப்படும். பெண்களுக்கு எதிரான வன்முறையில் பாதிக்கப்பட்ட பெண்ணையே குற்றவாளியாக்கும் ஆணாதிக்க மனப்பான்மைதான் பெண்களுக்காக உருவாக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் உள்ள காவல் அதிகாரிகள், காவலர்களிடம் உள்ளது. அண்ணா பல்கலைக் கழக நிகழ்வுக்குப் பின்னர் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் மாணவியர்கள் இரவு 7 மணிக்குள் விடுதிக்கு வந்துவிட வேண்டும் என்று விதிகளைக் கொண்டு வந்துள்ளன. குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை எதுவும் செய்ய முடியாது, குற்றச் செயல் நடக்காமல் இருக்க நாம் தான் ஒதுங்கிப் போக வேண்டும் என்கிற பிற்போக்கு மனோபாவத்தையே இது காட்டுகிறது. மேலும் எந்தவொரு சட்டத்தையும் காவல்துறையினர் பயன்படுத்தும் விதத்தில்தான் அதன் சரியான அமலாக்கமும் உள்ளது. டெல்லி நிர்பயா வழக்கிற்குப் பின்னர் பல்வேறு சட்ட நடவடிக்கைகள் தண்டனை அதிகரிப்புகள் வந்த பின்னரும் நாட்டில் பாலியல் வன்கொடுமைக் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. பெண்களுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளை விசாரிக்க, மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம், திருச்சி, சென்னை மற்றும் சென்னையின் சுற்றுப்புற பகுதிகளில், ஏழு தனி சிறப்பு நீதிமன்றங்கள் புதிதாக அமைக்கப்படும் என முதல்வர் அறிவித்திருக்கிறார். அநேகமாக இந்த இடங்களில் எல்லாம் மாவட்ட நீதிபதி பதவியில் மகளிர் நீதிமன்றங்கள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் தடுப்புச் சட்டத்தை விசாரிக்க நீதித்துறை நடுவர் அந்தஸ்த்தில் கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனால், பல நீதிமன்றங்களில் நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. ஒரே நீதிபதி இரண்டு மூன்று நீதிமன்றங்களைப் பார்க்கும் அவல நிலைதான் உள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் நீதிபதிகள்கூட சமூகச் சூழல்தான் குற்றங்களுக்குக் காரணம் என்பதைப் புரிந்து கொள்வதில் சிரமம் உள்ளவர்கள்தான், வழக்கறிஞர்கள் பணியில் குறைந்தபட்ச அனுபவம் இல்லாதவர்கள்தான் நியமிக்கப்படுகிறார்கள். அது மட்டுமின்றி, வழக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நீதிமன்றங்கள், பணியாளர்கள் இல்லை. நேரடி நீதிமன்றங்களின் எண்ணிக்கையைக் குறைத்து ‘விர்ச்சுவல் கோர்ட்’என்ற பெயரில் காணொலி நீதிமன்றங்களைக் கொண்டு வரும் முயற்சிகள் நடக்கின்றன. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் தனி நீதிமன்றங்களில் 18 வயது நிரம்பாத சிறார்களிடையேயான காதல் காரணமாகவே பல வழக்குகள் பதியப்பட்டு நிலுவையில் உள்ளதைக் காணமுடிகிறது. பண பலம், அரசியல் செல்வாக்கு, சாதியக் கண்ணோட்டம் போன்றவற்றால் வழக்குகள் பதியப்படுவதில்லை என்பது ஒருபுறம் என்றால், பதியப்பட்ட வழக்குகள் விசாணைக்கு வருவதும் விரைந்து விசாரணை முடித்து உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் கேள்விக்குறியாகவே உள்ளன. தெரிந்தே குற்றம் செய்பவர்களுக்கு தண்டனையின் மீதான அச்சம் இருப்பதேயில்லை.

மரண தண்டனைக்கு எதிராக அதிகமான போராட்டங்களை நடத்திய மாநிலம் தமிழ்நாடுதான். அதன் விளைவாகவே எழுவர் விடுதலை சாத்தியமானது. அப்படிப்பட்ட ஒரு முற்போக்கான மாநிலத்தில், உலகம் முழுவதும் மரண தண்டனைக்கு எதிரான குரல்கள் வலுத்துக் கொண்டுவரும் சூழலில், மரண தண்டனைக்கான சட்டத் திருத்தம் கொண்டுவந்துள்ளதானது பிற்போக்கு, பாசிச பாஜகவின் திட்டங்களை முற்போக்கு, சமூக நீதி அரசும் பின்பற்றுமானால் திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு என்ன பொருள் இருக்கும். ஆயுள்தண்டனை, மரண தண்டனை என தண்டனையை அதிகரிப்பதற்குப் பதிலாக பெண்களுக்கு சுயமரியாதை வழங்கிடக் கூடிய, ஆணாதிக்க மனப்பான்மையை மாற்றிடும் அறிவியல் பூர்வமான ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதுதான் பெரியார் மண் என்பதற்குப் பொருள் தரும்.




# ஆளுநர் ஆர்.என்.ரவியை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்; ஆளுநர் பதவியை ஒழித்துக் கட்ட வேண்டும்!!

**சிம்சன்**

இந்த ஆண்டின் தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடரிலிருந்தும் ஆளுநர் ரவீந்திர நாராயண ரவி வெளியேறி விட்டார்! வழக்கம் போல், முதல் நிகழ்வாக, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. தேசியகீதம் முதலாவதாக இசைக்கப்படவில்லை என்றுகூறி ஆளுநர் வெளியேறிவிட்டார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு முன் வைக்கும் அறிக்கையையே சட்டப்பேரவையில் ஆளுநர் வாசிக்க வேண்டும். ஆனால், ஆளுநர் உரையை வாசிக்காமல் சட்டப்பேரவையை விட்டு வெளியேறிவிட்டார். இந்த ஆண்டு மட்டுமல்ல தொடர்ச்சியாக கடந்த மூன்று ஆண்டுகளாக ஆளுநர் ரவி இவ்வாறு தான் நடந்து கொள்கிறார். தமிழ்நாடு அரசின் அறிக்கையை வாசிப்பதற்கு அவருக்கு மனமில்லை. அப்படியே வாசித்தாலும் தமிழ்நாடு அரசின் அறிக்கையில் உள்ள சமூக நீதி, திராவிடம் போன்ற வார்த்தைகளை வாசிக்கமாட்டார். அரசின் அறிக்கையில் இல்லாதவற்றை கூடுதலாக குறிப்பாக ஆர்எஸ்எஸ் கொள்கைத் திட்டங்களை வலியுறுத்தும் விதத்தில் நடந்து கொள்வார்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மரபு இருக்கிறது. துவக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், முடிவில் தேசிய கீதமும் பாடுவதுதான் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நீண்டகாலமாக இருந்து வரும் மரபு. அதனை மாற்றி அமைப்பதற்கு ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை. தமிழ்நாடு, ஒன்றிய பாஜக அரசின் ஆர்எஸ்எஸ் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக இருப்பதால் மோடி - ஷாவின் பிரதிநிதியாக ஆளுநர் ஆர்.என்.ரவி பலவிதமாக பாஜகவின் வெறுப்பு அரசியலை வெளிப்படுத்திட வம்பிழுத்து வருகிறார். தமிழ்நாடு அல்ல, தமிழகம் என்பார். பொங்கல் வாழ்த்துச் சொல்லும் போது பெரும்பான்மை தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்பில்லாத, பிற மத மக்களுக்குத் தொடர்பில்லாத ஸ்ரீராமனின் நெஞ்சில் இடம் பெற்றிருக்கும் குடிமக்கள் என்பார். இவ்வாண்டு பொங்கல் வாழ்த்துகூட சொல்லவில்லை. இந்திய வரலாறு மாற்றி எழுதப்பட வேண்டும் என்பார். தமிழ்நாடு ஆன்மீக பூமி எனக் கூறுவார். வள்ளுவரின் சிலைக்கு காவி வர்ணம் பூசச் செய்வார். வள்ளலாரை வாய் கூசாமல் சனாதனியாக்குவார். நீட், ஆன்லைன் ரம்மி, 7.5% இடஒதுக்கீடு மசோதாக்களுக்கு கையெழுத்து போடாமல் இழுத்தடிப்பார். இப்படி ஒன்றிய பாஜக அரசின் ஆணைக்கேற்ப ஆளுநர் ஆர்.என். ரவி அப்பட்டமாகச் செயல்பட்டு வருகிறார்.

ஆளுநர் என்ற பதவி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களின் நிர்வாகக் காரணத்திற்காக உருவாக்கப்பட்டது. மத்தியில் ஆட்சி செய்யும் ஆங்கிலேயர்களுக்கு கட்டுப்பட்டே மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக ஆளுநர் பதவியை வைத்திருந்தனர். இன்று ஆங்கிலேயர் காலத்து குற்றவியல் சட்டங்கள் என்று சொல்லி அவற்றை மாற்றும் பாஜக, ஆங்கிலேயர் காலத்து ஆளுநர் பதவியை மட்டும் இன்னும் அப்படியே வைத்துக் கொண்டுள்ளது. ஏனென்றால் பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் தன்னுடைய நிகழ்ச்சி நிரலைச் செயல்படுத்துவதற்காக. ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் அவசியமில்லாதது என்றார் அண்ணாதுரை. பெரியாரும் ஆளுநர் பதவியை ஒழிக்கச் சொன்னார். ஆளுநர் ஆர்.என்.ரவியின் மாநில அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்திய உச்சநீதிமன்றம் கடுமையான வார்த்தைகளில் கண்டித்தது. அதற்குப் பின்னும் அவர் தன்னுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை. அவரை குடியரசுத் தலைவர் மாற்றவும் இல்லை.

தமிழ்நாட்டு மக்களை, தமிழ்மொழியை அவமதிக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் வெளிநடப்புச் செயலை ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் கண்டித்துள்ளன. பாஜக கூட்டணியில் இருக்கும் பாமக அன்புமணியும் கூட கண்டனம் தெரிவித்துள்ளார். அதிமுகவோ ஆளுநரை வெளியேறுமாறுச் செய்துவிட்டார்கள் என்று திமுக அரசை குற்றம் சாட்டுகிறது.

ஆளுநர்பதவியிலிருப்பவருக்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பும் உள்ளது. அப்படியிருக்கும்போது அரசமைப்புச் சட்டப்படி பதவியேற்ற ஆளுநர், அரசமைப்புச் சட்டப்படி மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு அரசின் சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்கிறார் என்று சொன்னால், ஆளுநர் ஆர்.என். ரவி இந்திய அரசமைப்புச் சட்டத்தை, இந்திய இறையாளுமையை, ஜனநாயகக் கோட்பாட்டை மதிக்கத் தயாரில்லை என்றுதானே பொருள். ஆகவே, குடியரசுத் தலைவர் ஆர்.என்.ரவியைத் திரும்பப்பெற வேண்டும். அதுமட்டுமின்றி, அவசியமற்ற, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு விரோதமான ஆளுநர் பதவியையே ஒழித்துக் கட்ட வேண்டும்.

# மண்ணைக் காக்க; விவசாயத்தைக் காக்க; இயற்கை – சுற்றுசூழல் – வாழ்வாதாரம்; பண்பாட்டைப் பாதுகாக்க ... மக்கள் இயக்கத்தை வலுப்படுத்துவோம்!

- **மோடி அரசாங்கம், கார்ப்பரேட் நிறுவனங்கள் சூறையாட வழி செய்கிறது :-**

ஒன்றிய பாஜக கூட்டணி அரசாங்கம், கொலைகார வேதாந்தா நிறுவனத்தின் ★ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்★ Hindustan Zinc Limited ற்கு, மதுரை மாவட்டத்தில், 5000 ஏக்கருக்கு கூடுதலான பரப்பில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கங்கள் அமைக்க அனுமதி வழங்கும் ஏலத்தை கடந்த 2024 நவம்பர் 07 ல் அறிவித்தது. இது, மண்ணையும் மக்களையும் அழிக்கும் நாசகரமான திட்டம் என்பதை உணர்ந்த மதுரை மாவட்ட முல்லைப் பெரியாறு பாசன விவசாயிகள் குறிப்பாக மேலூர் வட்ட முல்லைப் பெரியாறு ஒருபோக பாசன விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், வணிகர்கள், மாணவர்கள் என சாதி, மத வேறுபாடுகள் இன்றி அனைத்துத் தரப்பினரும் கொதித்து எழுந்து போராடி வருகின்றனர்.

பாசிச மோடி அரசு, கார்ப்பரேட் முதலாளிகள், நாட்டின் இயற்கை வளங்களைச் சூறையாட பல்வேறு சட்டங்கள், திட்டங்கள் போட்டு வருகிறது. இதற்காகவே, மூன்று வேளாண் சட்டங்கள் கொண்டு வந்தது; வரலாற்றுச் சிறப்புமிக்க தில்லி விவசாயிகள் போராட்டம் அந்தச் சதியை முறியடித்ததை அறிவோம்.

கனிமச் சுரங்கங்கள் அமைப்பது, ஏற்கனவே மாநில அரசு அதிகார வரம்பில் இருந்தது. மட்டுமின்றி, பஞ்சாயத்து ராஜ் சட்டம், வன உரிமைச் சட்டம், சுற்றுச்சூழல் சட்டங்கள், விதிகளுக்குக் கட்டுப்பட்ட நிலையும் இருந்தது. ஆனால், ஒன்றிய பாஜக கூட்டணி அரசாங்கம் கொண்டுவந்துள்ள "கனிமங்கள் ஏலம் திருத்தச் சட்டம் 2023" மூலமாக, நாட்டின் அனைத்து கனிமவளங்களையும் தனது ஒன்றிய அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்து அதனடிப்படையில் டங்ஸ்டன் சுரங்கம் தோண்ட ஏலம் விட்டுள்ளது.

- **அழிவுக்கு தள்ளப்படும் விவசாயிகள் :-**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் அரிட்டாபட்டி, அ. வல்லாளப்பட்டி சுற்றுவட்டார கிராமங்களில் 5000 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்த டங்ஸ்டன் முதல் பிளாக் சுரங்க திட்டம் அறிவிக்கப்பட்டது;

மேலவளவு சோமகிரி மலை தொடங்கி வஞ்சிநகரம்-கம்பளிபட்டி வரையிலான பகுதிகளை உள்ளடக்கிய மற்றொரு டங்ஸ்டன் பிளாக்கையும் மத்திய சுரங்கத்துறை அறிவித்துள்ளது. கூடுதலாக, திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டத்தில் உள்ள சில ஊராட்சிகள், சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் சார்ந்த ஒருசில ஊராட்சிகள் உட்பட சுமார் 38,500 ஏக்கர் பரப்பில் டங்ஸ்டன் ஆய்வு நடத்தப்பட்டுள்ளதாக விவரங்கள் தெரிவிக்கின்றன.

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தைச் சார்ந்த இலட்சக்கணக்கான ஏழை, சிறு குறு விவசாயிகள், முல்லைப் பெரியாறு பாசனத்தை மட்டுமே தங்களுடைய உயிராதாரமாகக் கொண்டுள்ளனர். ஏற்கனவே, முல்லைப் பெரியாறு தண்ணீர் பங்கீடுப் பிரச்சினைகளால் நெருக்கடிகளில் சிக்கியுள்ள ஒருபோக, இருபோக பாசன விவசாயிகள் சுரங்கங்கள் அமைக்கப்பட்டால் வாழ்வாதாரம் பறிக்கப்படும் ஆபத்திற்குள்ளாகியுள்ளனர்.

எனவே தான், ''டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும் ; முல்லைப் பெரியாறு பாசனப் பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திட வேண்டும்'' எனப் போராடி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, சனவரி 7 ந் தேதியன்று பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், பொதுமக்கள் மேலூர் - நரசிங்கம்பட்டி துவங்கி மதுரை வரை நடைபயணமாக போராட்டக் களத்தில் அணிவகுத்தனர். தமிழ்நாடு சட்டப்பேரவையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க கூடாது என தீர்மானத்தை நிறைவேற்றியது திமுக அரசாங்கம் ; ஆனால், தமிழ்நாடு காவல்துறையோ 5000 போராட்டக்காரர்கள் மீது வழக்கு தொடுத்துள்ளது. ஒன்றிய அரசு மீதான மக்களின் கடுங்கோபத்தை தணிக்க மேலூர் வந்த தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலையின் வெற்று வாக்குறுதியை மக்கள் ஏற்கவில்லை.

- **தமிழர் பண்பாடு அழிக்கப்படும்:-**

ஒன்றிய பாஜக அரசாங்கம் டங்ஸ்டன் ஏலம் விட்டுள்ள பகுதியில், இந்திய தொல்லியல் துறை மற்றும் தமிழ்நாடு தொல்லியல் துறை பராமரிக்கும் நான்கு வரலாற்று தொல்லியல் தளங்கள் உள்ளன ; இவற்றில், தமிழர் பண்பாட்டின் தொன்மையை பறைசாற்றும் கிமு 2ம் நூற்றாண்டின் தமிழி கல்வெட்டுகள் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மேலூர் வட்ட அரிட்டாபட்டி, மாங்குளம் சமணர் குகைகள், கோவில்கள் அமைந்துள்ளன.

அரிட்டாபட்டியில் தான், தமிழ்நாடு அரசு சுமார் 477.4 ஏக்கர் பரப்பளவில் ஏரி, வனம், குன்றுகள் கொண்ட ஒரு பல்லுயிர் சூழல் மண்டலத்தை வரையறுத்து, கடந்த 22.11.2022 ல் தமிழ்நாட்டின் முதல் பல்லுயிர் சூழல் புராதன தளமாக (Biodiversity Heritage Site) அறிவித்தது.

இந்நிலையில், கார்ப்பரேட் முதலாளித்துவ நிறுவனங்கள் கொழுத்துப் பெருக்க, விவசாயிகள் - மக்கள் தங்கள் மண், விவசாயம், இயற்கை - சுற்றுச்சூழல் - வாழ்வாதாரம், பண்பாடு ஆகியவற்றை இழக்க வேண்டுமா ?

**விவசாயிகள் விரோத, சுற்றுச்சூழல் விரோத, மக்கள் விரோத டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் வேண்டாம் !**

**ஒன்றிய அரசே!**

- **விவசாயிகள் விரோத, சுற்றுச்சூழல் விரோத டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தைக் கைவிடு!**
- **கனிமங்கள் ஏலம் திருத்தச் சட்டம் 2023 அய் உடனடியாகத் திரும்பப்பெறு !**
- **நாட்டின் கனிம வளங்களை தனியார் கார்ப்பரேட்டுகளுக்கு ஏலம் விடாதே!**
- **தமிழர் பண்பாட்டுச் சின்னங்களை அழிக்கும் திட்டத்தை அமல்படுத்தாதே !**

**தமிழ்நாடு அரசே!**

- **முல்லைப் பெரியாறு பாசனப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திடுக!**
- **கனிமங்கள் ஏலத் திருத்தச் சட்டம் 2023 அய் ரத்து செய்ய வலியுறுத்தி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்று!**

மலைகளை வெறும் பணமாக பார்க்கும் தொழில் நிறுவனங்கள் மக்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் அழிக்கின்றனர். வருங்காலத் தலைமுறைக்கு நாம் நம்முடைய இயற்கையையும், வளங்களையும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும்.

- **பா. பாபாஜி (முதுகலை தமிழ் மாணவன்) கிடாரிப்பட்டி.**

நாங்கள் அனைவரும் தற்சார்பு வாழ்க்கை வாழ்கிறோம். எங்களுக்கான உணவை நாங்களே உற்பத்தி செய்து கொள்கிறோம். இந்தக் கனிம சுரங்கம் வந்தால் எங்கள் மக்களின் வாழ்வாதாரமான விவசாயம் மட்டுமல்லாமல், இந்த மண்ணே பாலைவனமாக மாறிவிடும். இந்த மலையே எங்கள் நீராதாரம். மலையைச் சுற்றி விவசாயம் செய்கிறோம். தோண்டினால் சில அடிகளிலே தெளிந்த நீர் இருக்கும். இந்த நீர் வருடம் முழுவதும் இருக்கும். எங்களின் மண்ணை எடுத்து பன்னாட்டு கம்பெனிக்குக் கொடுக்கப் போகிறார்கள். நாங்கள் விடமாட்டோம்.

எங்களுக்கு ஏற்கனவே ஒரு கிரானைட் குவாரி ஏற்படுத்திய மோசமான விளைவுகளின் அனுபவம் உள்ளது. டங்ஸ்டன் சுரங்கம் எங்கள் வாழ்வை அழிக்க விடமாட்டோம்.

- **பார்த்திபன், விவசாயி, அரிட்டாப்பட்டி**

ஒரு வருடத்துக்கு முன்பே நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்து விட்டோம்.

1-4-2023ல் எங்களுக்குத் தகவல் தெரிந்து ஊரில் கூட்டம் போட்டோம். அதிகாரிகளுக்குத் தெரிந்து வந்தார்கள். தாசில்தார், யார் செய்தி சொன்னது? புரூப் காட்டு என்றார். கொஞ்ச நேரத்தில் போலீஸ் வந்துவிட்டது. மக்களிடம் தேவையில்லாத அச்சத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்று சொன்ன போலீஸ்காரர்கள் கூட்டத்தைக் கலைக்கச் சொன்னார்கள். நாங்கள் அப்போது பின்வாங்கிவிட்டோம். பின்வாங்காது இருந்திருந்தால் லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்தியிருக்கலாம். நேற்றுவரை வதந்தி என்றுதான் சொன்னார்கள். இப்போதுதான் தமிழக அரசு செய்தியை ஒப்புக்கொண்டு அனுமதி அளிக்க மாட்டோம் என்கிறது.

- **செல்லப்பாண்டி, விவசாயி, அரிட்டாப்பட்டி**

செம்மொழிக்கான ஆதாரத்தை கலைஞருக்கு அளித்தது அரிட்டாபட்டி.

அரிட்டாப்பட்டி மிகவும் தொன்மையானது. கி.மு மூன்றாம் நூற்றாண்டின் தமிழி (பிராமி) எழுத்துகள் இங்கே உள்ளன. இதனை வைத்துதான் தமிழ் செம்மொழி என்று கலைஞர் நிரூபித்தார். இன்னமும் படிக்கப்படாத கல்வெட்டுகள் இங்கே உள்ளன. நமது பாரம்பரியத்தைக் காக்க வேண்டும். மலைதான் எங்களின் நீராதாரம். மலையில் பெய்யும் மழை கண்மாய்களில் தேங்கி இங்கே விவசாயம் நடக்கிறது. தமிழர்களின் பாரம்பரிய நீர்ப்பாசன முறையின் சிறப்புக்கு ஆதாரமாக மலையும், அதன் நீரைத் தேக்கும் தொன்மையான கட்டமைப்புகளும், பாண்டியர் காலம் வரையிலான கோவில்களும் உள்ளன.

- **தங்க கருப்பையா, கல்லூரி தமிழ் (தற்காலிக) ஆசிரியர்**

கிரனைடு மாபியாக்களிடமிருந்து தப்பித்த நாங்கள் உலக மாபியா வேதாந்தா கையில் சிக்க மாட்டோம்.

மேலூரில் கடையடைப்பும், விவசாயிகளின் கண்டன ஆர்ப்பாட்டமும் நடந்தபோது, மதுரை மாவட்ட அமைச்சர் திரு. மூர்த்தி, எதிர்க்கட்சி எம்எல்ஏ பெரியபுள்ளான் செல்வமும் சேர்ந்து வந்து மக்களிடம் பேசினார்கள். ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் சேர்ந்து தீர்மானம் கொண்டுவருவோம். திட்டத்தை வரவிடமாட்டோம் என்று உறுதி அளித்தனர். அந்த உறுதியின் பேரில் மக்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைத்தார்கள்.

இது ஒரு தொடக்க கட்ட போராட்டம் தான். இப்பிரச்சனை நீண்ட காலம் எடுக்கும். கிரானைட், டங்ஸ்டன் என்று அடுத்தடுத்து தாக்குதல்கள் வருகின்றன. கிரானைடு மாபியாக்களிடமிருந்து தப்பித்த நாங்கள் உலக மாபியா வேதாந்தா கையில் சிக்க மாட்டோம்.

- **கம்பூர் செல்வராஜ் போராட்டக் கமிட்டி உறுப்பினர்**

# எல்&டி நிறுவனத் தலைவர் பேச்சுக்கு ஏஐசிசிடியு கடும் கண்டனம்!

லார்சன் & ட்யூப்ரோ நிறுவனத் தலைவர் சுப்பிரமணியன் இந்தியத் தொழிலாளர்கள் வாரத்தில் 90 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை செய்ய வேண்டுமென்றும் சமீபத்தில் பேசியிருந்தார். ஏற்கனவே இதற்கு முன்னர் இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தி இந்தியா உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், போட்டியிடும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் இந்திய இளைஞர்கள் வாரத்தில் 70 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஓலா நிறுவனத்தின் பாவிஷ் அகர்வால், ஜிண்டால் ஸ்டீல் நிறுவனத்தின் சஜ்ஜன் ஜிண்டால் ஆகியோர் இந்த முன் மொழிவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

தொழிலாளர்களின் உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் பற்றிய எவ்வித கவலையும் இன்றி இவர்கள் பேசுவதற்கு ஒன்றிய மோடி அரசின் கார்ப்பரேட் சார்பு, கம்பெனி ராஜ்யத்தை வலுப்படுத்தும் கொள்கைகளே துணிச்சல் அளித்திருக்கின்றன. மேலும் இவர்கள் சட்டவிரோதமாக 12 மணி நேர வேலை நேரத்தை ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அமல்படுத்தியும் வருகிறார்கள்.

8 மணி நேர வேலை என்பது உயிர்த் தியாகம் செய்து பெறப்பட்டதாகும். 1934 ஆம் ஆண்டைய தொழிற்சாலை சட்டத்துக்கு 1946 ஆம் ஆண்டு அப்போது இருந்த வைஸ்ராய் கவுன்சிலில் அதன் உறுப்பினராக இருந்த டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் திருத்த மசோதா கொண்டு வந்ததன் மூலம் இந்தியாவில் 8 மணி நேர வேலை சட்டப்பூர்வமாக்கப்பட்டது.

நீண்ட பணி நேரம் தொழிலாளர்களின் உடல்நலத்தை பாரதூரமாக பாதிக்கும் என்றும் பல்வேறு உடல் உறுப்புகள் பாதிப்புக்கு உள்ளாவதோடு தொழிலாளர்களின் மன நிலையிலும் பாதிப்புகளை உண்டு பண்ணும் என்றும் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதேபோல் நீண்ட பணி நேரம் என்பது உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு பதிலாக குறைக்கவே செய்யும். உண்மையிலேயே குறைந்த வேலை நேரம், அதிகரித்த ஊதியம் என்பதுதான் உற்பத்தித் திறனை அதிகரிக்கும். பல்வேறு நாடுகள் 6 மணி நேர வேலை நாளை நோக்கி போய்க் கொண்டிருக்கின்றன.

கடினமாக உழைக்கும் தொழிலாளர் பட்டாளத்தைக் கொண்டதாக இந்தியா ஏற்கனவே இருந்து வருகிறது. 2023 சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அறிக்கையின்படி உலகின் 10 பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் இந்தியர்கள்தான் வாரத்தில் சராசரி அதிக நேரம் வேலை பார்ப்பவர்களாக இருக்கின்றனர். கூலி குறைவாக இருப்பதால் குடும்பச் செலவினத்தை ஈடு செய்ய ஒருவர் இரண்டு வேலைகளை பார்க்கவும் நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

இந்தியாவில் உள்ள பெரும் கார்ப்பரேட் கம்பெனிகளின் முதன்மை அதிகாரிகள் (CEO) பெற்று வரும் வருமானம் அந்நிறுவன ஊழியர்களின் சராசரி வருமானத்தை விட 500 முதல் 800 மடங்கு வரை கூடுதலாக உள்ளது. 2023 - 24 காலகட்டத்தில் இதே எல் & டி நிறுவனத் தலைவரின் ஊதியம் 51 கோடி. இது அந் நிறுவன ஊழியர்களின் சராசரி ஊதியத்தை விட 534.57 மடங்கு அதிகம்.

வீட்டில் உட்கார்ந்து கொண்டு எவ்வளவு நேரம் உங்கள் மனைவியை வெறித்து பார்த்துக் கொண்டே இருப்பீர்கள்? என்று எல் & டி சேர்மன் கேள்வி எழுப்பி இருக்கிறார். பெண்கள் ஊதியம் பெறும் வேலைக்குச் செல்வது ஒருபுறம் என்றால், மறுபுறம் பெண்கள் ஓய்வு ஒழிச்சல் கூட இல்லாமல் பொழுதன்னைக்கும் வீட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வேலைகளுக்கு எவ்வித ஊதியமும் கிடையாது. எல் & டி சேர்மனின் கேள்வி பெண்களின் உழைப்பை கண்ணுக்குத் தெரியாமல் மூடி மறைப்பதாகும். வேலை நேர நீட்டிப்பு என்பது ஆண், பெண் ஊதிய இடைவெளியை இன்னும் அதிகரிக்கவே செய்யும்.

நமது அரசின் கொள்கை வழிகாட்டு நெறிமுறைகளானது குறிப்பாக "தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை அவர்களின் ஆற்றல் வலுவை பேணுவதாக இருக்க வேண்டும் என்றும், நியாயமான மனிதாபிமானமிக்க பணி நிலைமைகளை உத்தரவாதம் செய்ய வேண்டும்" என்றும் சொல்கிறது.

கார்ப்பரேட்டுகளின் இது போன்ற அறிவிப்புகளை ஏஐசிசிடியு வன்மையாகக் கண்டிப்பதோடு ஒன்றிய, மாநில அரசாங்கங்கள் வேலை நேரம் சம்பந்தப்பட்ட சட்டங்களை முறையாக அமலாக்க வேண்டும் என்றும் வாரத்திற்கு சட்டப்படியான 48 மணி நேர வேலை என்பதைத் தாண்டி கூடுதல் நேரம் பணியாற்றும்படி தொழிலாளர்களை நிர்ப்பந்தப்படுத்தக் கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறது. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளையும் கௌரவத்தையும் உத்தரவாதம் செய்யும் விதமாக தொழிலாளர்களின் ஆரோக்கியம் மற்றும் வாழ்வை பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறது.

# அரசமைப்புச் சட்டம் காப்போம்! மதச்சார்பற்ற, சோசலிச, ஜனநாயக குடியரசைக் காப்போம்!

## அரசியல் பரப்புரை இயக்கம்

**2024 நவம்பர் 26 - 2025 ஜனவரி 26**

## இகக (மாலெ) நடத்தும் அரசியல் கருத்தரங்கம்

**ஜனவரி 25- நெல்லை**

அன்பிற்கினிய உழைக்கும் மக்களே, தேச ஒற்றுமைக்கும் மக்கள் ஒற்றுமைக்கும் பாடுபடும் நாட்டுப்பற்றாளர்களே,

தமிழ்நாடு சட்டப்பேரவையில் தேசிய கீதம் இசைக்க மறுக்கப்படுகிறது என்று கூறி ஆர்எஸ்எஸ் ஆர்என்.ரவி வெளிநடப்பு செய்துவிட்டார்! தேசிய கீதத்தையும் அரசமைப்புச் சட்டத்தையும் தமிழ்நாடு சட்டப்பேரவையும் தமிழ்நாடும் அவமதித்துவிட்டதாக கதை கட்ட பார்க்கிறார். பாஜக தலைவர்களும் தலையாட்டுகிறார்கள். ஆளுநருக்கு தமிழ்நாடு வரலாறு தெரியாது. அவருக்கு நினைவு படுத்துவோம்.

விடுதலை இயக்கம் சுடர்விட்டு ஒளிர்ந்த பகுதி தென் தமிழகம். வீரன் சுந்தரலிங்கம், பூலித்தேவன், வேலுநாச்சியார், குயிலி, கட்டபொம்மன், வ. உ.சி, பாரதியார் போன்றோர் கண்ணீர் விட்டு, செந்நீர் சிந்தி நாட்டு விடுதலைக்கு பாடுபட்டனர். திருப்பூர் குமரன் போன்றோர் உயிர்துறந்தனர். “ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று..” விடுதலை பெற்ற இந்தியாவில் பாடி ஆடி மகிழ மகாகவி பாரதி பாடல் எழுதினான். பிரிட்டிஷார்களை நடுநடுங்கச் செய்த வேலூர் சிப்பாய்க் கிளர்ச்சி முதல் வெடிப்பாய் வடதமிழ்நாட்டில் வெடித்தது. தொழிலாளர் எழுச்சி, விவசாயிகள் கிளர்ச்சி, பழங்குடிகள் கலகம், 1857 முதல் சுதந்திரப்போர், கப்பற்படை எழுச்சி, வெள்ளையனே வெளியேறு ஆகஸ்ட் புரட்சி இவற்றால் இந்தியா விடுதலை பெற்றது. இந்தியா தனக்கான அரசமைப்புச் சட்டத்தைப் பெற்றது. இந்தியா குடியரசானது.

இது அரசமைப்புச் சட்டத்தின் 75 வது ஆண்டு. இந்தியா குடியரசானதின் 75 வது ஆண்டு. ஆனால் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெறாதவர்கள், பிரிட்டிஷாருக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர்களின் வாரிசுகள், காந்தியை கொன்ற கோட்சேவின் சீடர்கள், மனுஸ்மிருதியை அரசமைப்புச்சட்டமாக்க வேண்டுமென வாதாடியவர்களின் வழிவந்தவர்கள் இன்று ஆட்சி அதிகாரத்திலிருக்கிறார்கள்!

மதம், சாதி, இனம், பிரதேசம், மொழி இவற்றின் பேரால் யாருக்கும் பாகுபாடு இருக்காது என்று அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. பன்மைத்துவம் பாதுகாக்கப்படும்; மக்கள் ஒற்றுமை பேணி வளர்க்கப்படும் என்று சொல்கிறது. ஆனால் 10 ஆண்டுகால பாஜக-ஆர்எஸ்எஸ் ஆட்சி, மதவேறுபாடுகளை, சாதிப் பாகுபாடுகளை தீயிட்டு வளர்க்கிறது. வடக்கு, தெற்கு என்று இந்தியாவைப் பிளவுபடுத்துகிறது, மக்கள் ஒற்றுமையை சுக்கு நூறாக்குகிறது. மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கும் எடுத்துக்காட்டு. தலித்துகள், பெண்களை சமூகத்திலிருந்து விலக்கி வைக்கும் மனு ஸ்மிருதி கொள்கையை சிறுபான்மை மக்களையும் விலக்கி வைக்க இழிவுபடுத்த பயன்படுத்துகின்றனர் மதவெறி பாசிஸ்டுகள்.

அரசமைப்புச் சட்டம் வழங்கிய மதச்சார்பற்ற, சோசலிஸ்ட், ஜனநாயக குடியரசை தகர்க்க அதிகாரத்தில் இருக்கும் பாசிச சக்திகள் தீவிரமாக முயற்சிக்கின்றன. அரசமைப்புச்சட்ட முகப்புரையிலிருந்து மதச்சார்பின்மை, சோசலிஸ்ட் என்ற பிரகடனங்களை நீக்க வேண்டுமென்று முயற்சித்தவர்கள் உச்சநீதிமன்றத்திடம் குட்டுப்பட்டனர். ஒரே மொழி, ஒரே மதம், ஒரே தேர்தல், ஒரே கட்சி, ஒரே நாடு என அதிபர் ஆட்சி முறையிலான பாசிச சர்வாதிகாரத்தைக் கொண்டு வரத்துடிக்கின்றனர். நமது குடியரசு, நாடாளுமன்ற ஜனநாயக முறையால் நடத்தப்படும் கூட்டாட்சி முறையை கொண்டிருக்கும் என்ற ஜனநாயக மாண்பைச் சிதைத்து வருகிறது மோடி ஆட்சி. மக்கள் தேர்ந்தெடுத்த மாநில ஆட்சியை ஆர் என் ரவி போன்ற ஆளுநரைக் கொண்டு சீண்டிப் பார்ப்பது, மாநில அரசுகளை நகராட்சி போல் நடத்துவது இவை அனைத்தும் அரசமைப்பு சட்ட நெறிகளுக்கு, குடியரசு மாண்புகளுக்கு எதிரானது.

“ஒரு மனிதர், ஒரு வாக்கு, ஒரு மதிப்பு” என்பது அரசமைப்புச் சட்ட நெறி. இதை “எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை” என்று பாரதி சொன்னான்.

பாரதியை புகழும் சங்பரிவார் கூட்டம் பாரதியின் மக்களாட்சிக் கொள்கையை குழிதோண்டி புதைக்கப் பாடுபட்டுவருகிறது. அரசமைப்புச் சட்டம், குடிமக்கள் முதலாவது என்று சொல்கிறது. அதனால்தான் இந்தியா குடியரசு எனப்படுகிறது.

பாசிசம், சர்வாதிகாரம் முதலாவது என்று சொல்கிறது. அனைத்து வகையிலும் ஜனநாயகத்தை அழித்தொழிக்க திட்டமிடுகிறது. பாசிச சர்வாதிகாரம், இந்து ராஷ்ட்ரா சர்வாதிகாரமே. அதனால்தான், "என்னவிலை கொடுத்தேனும் இந்தியா இந்து ராஷ்ட்ரமாவதை தடுத்து நிறுத்துவோம்" என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னார். அதனால்தான் அமித்ஷாவும் மோடியும் அம்பேத்கரை கண்டு அஞ்சுகிறார்கள்.

**கார்ப்பரேட்-மதவெறி பாசிசத்திடமிருந்து**

**அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்; மதச்சார்பற்ற, சோசலிஸ்ட், ஜனநாயக, குடியரசைக் காப்போம்!**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

**(மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்), தமிழ்நாடு**

### 90 மணிநேர வேலை

# தொழிலாளர் துறை அமைச்சருக்கு இகக (மாலெ) மக்களவை உறுப்பினர் கடிதம்

உற்பத்தியை பெருக்க வாரத்திற்கு 70 மணி நேர வேலை வேண்டுமென இன்ஃபோசிஸ் நாராயணமூர்த்தியும் 90 மணிநேர வேலை வேண்டுமென எல் அண்ட் டி தலைவர் சுப்ரமணியனும் தெரிவித்துள்ள கருத்துகளை கண்டித்து இகக (மாலெ) மக்களவை உறுப்பினரும் தொழிலாளர், ஜவுளி, திறன் வளர்ச்சிக்கான நாடாளுமன்ற குழு உறுப்பினருமான ராஜாராம் சிங், தொழிலாளர் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். ஜனவரி 10 அன்று எழுதியுள்ள கடிதத்தில், எட்டு மணிநேர வேலை பெரும் போராட்டங்கள், தியாகங்களுக்குப்பிறகு ஏற்பட்டது. எந்தவகையிலும் அந்த உரிமையை பறிக்க அனுமதிக்க கூடாது. தொழிற்சாலை சட்டம் பிரிவு 51, "வாரத்தில் 48 மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கக் கூடாது" என்பதை கட்டாயமாக்கியுள்ளது. அரசு உடனடியாக தலையிட்டு, தொழில் நிறுவனங்கள், தொழிலாளர் சட்டங்களை கட்டாயமாக செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். சட்டரீதியான வாரத்திற்கு 48 மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்காமலிருப்பதை உறுதி செய்திட வேண்டும். சட்டவிதிகளை மீறும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்க வேண்டும், கார்ப்பரேட் அழுத்தம் அதிகரித்தும் வரும் சூழலில், தொழிலாளர் உரிமைகளை அரசு பாதுகாக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி உள்ளார். மேலும், உற்பத்தித்திறன் என்ற பேரால், உலக முழுவதுமுள்ள தொழிலாளரை விட இந்திய தொழிலாளர் அதிகம் சுரண்டப்படுவது அதிகரித்து வரும் நிலையில் உடனடி நடவடிக்கைக்கான இந்த கோரிக்கை மிகவும் அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பெண்கள் கழகம் கண்டனம்!

இந்திய தொழிலாளர், வாரத்திற்கு 90 மணிநேரம் வேலை செய்ய வேண்டும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் வேலைக்கு வர வேண்டும் என்ற எல் அண்ட் டி தலைவர் சுப்ரமணியன் கருத்தை பெண்கள் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மோடி ஆட்சியின் தொழிலாளர் விரோத கொள்கைகளே முதலாளிகளை இவ்வாறு பேச வைத்துள்ளது. நாட்டு வளர்ச்சிக்காக அசாதாரண முயற்சி வேண்டும் என்று கூறும் சுப்ரமணியன், அவரது கம்பெனியின் அசாதாரண வளர்ச்சி, அசாதாரண லாபத்துக்காக பேசுகிறார்.

தொழிலாளரது ஊதியம், வேலை நிலைமை, பாதுகாப்புப் பற்றி பேச முன்வரவில்லை. பெண் தொழிலாளரது மிகக் குறைவான ஊதியம், மோசமான வேலை நிலைமை, வேலைக்குப் பிறகு சமையல், குழந்தை பராமரிப்பு உள்ளிட்ட கூடுதல் சுமை, பணியிடங்களில் பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் போன்ற விசயங்கள் பற்றி கவலைப்படாத சுப்ரமணியன் கருத்துக்கு கடும் கண்டனத்தை பெண்கள் கழகம் தெரிவித்துக் கொள்கிறது.

இதுபோன்ற கருத்துகளை தெரிவிப்போரது தொழில் நிறுவனங்களை உடனடியாக சோதனைக்கு உட்படுத்த வேண்டும். நிறுவனங்கள் எட்டுமணி நேரத்துக்கு மேல் வேலை வாங்குவதை தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் வலியுறுத்துகிறது.

**ரதி ராவ், தேசிய தலைவர், - மீனா திவாரி, பொதுச்செயலாளர்**
**அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்**



# பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும்; அச்சமற்ற சுதந்திரம் வேண்டும்! பெண்கள் கழகம் முழக்கம்!







அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை நிகழ்வை அடுத்து அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் மாநில அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.


ஒன்றிய, மாநில அரசுகள் பெண்கள் மீதான வன்கொடுமைக்கு முடிவுகட்ட வேண்டும். பெண்கள் எங்கும் எப்போதும் எவ்விடத்திலும் அச்சமின்றி புழங்கும் அச்சமற்ற சுதந்திரம் பெண்களது அடிப்படை உரிமை;

என முழங்கி இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

வேலூரில், அஇமுபெக மாவட்டச் செயலாளர் சரோஜா தலைமை தாங்கினார். கோவையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலக் குழு உறுப்பினர் பிலோமினா தலைமை தாங்கினார். மயிலாடுதுறையில் நடைபெற்ற தொடர் முழக்க நிகழ்ச்சிக்கு மாநிலக் குழு உறுப்பினர் மாதவி தலைமை தாங்கினார். புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராஜலட்சுமி தலைமை தாங்கினார். மாநில அமைப்பாளர் ரேவதி கலந்து கொண்டு ஆவேச முழக்கங்களை எழுப்பினார். மதுரை சமயநல்லூரில் நடைபெற்ற கிளர்ச்சி நிகழ்ச்சிக்கு மாநிலக்குழு உறுப்பினர் வள்ளி மயில் தலைமை தாங்கினார்.அபிதா முழக்கங்கள் எழுப்பினார். குமரி மாவட்டம் குளச்சலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலக் குழு உறுப்பினர் கார்மல் தலைமை தாங்கினார். இகக(மாலெ) மாநிலக் கமிட்டி உறுப்பினர் சுசிலா கண்டன உரையாற்றினார்.

குறுகிய அவகாசத்தில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் அமுபெக செயல்வீரர்களும் உறுப்பினர்களும் ஆவேசத்துடன் கலந்து கொண்டனர்.

# ஜன.15: ரோசா லக்சம்பர்க் நினைவு நாள்!



ரோசா லக்சம்பர்க் கொல்லப்பட்ட பிறகு, அவரை நினைவு கூர்ந்த லெனின், “கழுகுகள் சில தடவை கோழிகளை விட தாழ்வாக பறக்கலாம் ; ஆனால், கோழிகள் எப்போதுமே கழுகுகள் பறக்கும் உயரத்தை எட்ட முடியாது “ என்ற ரஷ்ய பழமொழியை சுட்டிக் காட்டினார்; “... அவருடைய தவறுகளுக்கு அப்பால், அவர் நமக்கு கழுகு போல் நேற்றும், இன்றும் திகழ்கிறார் ... உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுகள் அவரது நினைவை மனதில் ஏந்துவது மட்டுமல்லாமல், அவரது வாழ்க்கை வரலாறும், முழுமையான படைப்புகளும் உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுகளின் தலைமுறை தலைமுறைக்கு பயிற்சி அளிக்கும் பயனுள்ள கையேடாகத் திகழும் “ என்றார், லெனின்.

**தோழர். ரோசா லக்சம்பர்க்கு செவ்வணக்கம் !**

## கவிதை - பெருமாள்முருகன்

**சுதந்திரம் வேண்டும்**
**எதையும் பேச**
**எதையும் எழுத**
**எதையும் பாட**
**எதையும் படிக்க**
**எதையும் கேட்கச்**
**சுதந்திரம் வேண்டும் (சுதந்திரம்)**

**விதவிதமாய்த் தோன்றும்**
**புதுப்புதுவகைச் சிந்தனை**
**எதற்கும் தடையில்லை**
**அதையெல்லாம் சொல்லச் (சுதந்திரம்)**

**நதியோட்டம் போலே**
**கதிரொளியைப் போலே**
**மதுமலரைப் போலே**
**மதிவானம் போலே**
**குதியலையைப் போலே**
**உதிக்கும் கருத்தெல்லாம்**
**உலகின்முன் எடுத்து**
**மதிமுருகு சொல்லச் (சுதந்திரம்)**



# தோழர் எஸ்என் மறைவு; ஆழ்ந்த இரங்கல்!



திருநெல்வேலி மாவட்டத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பிறந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் பணிபுரிந்த சென்னை பி அண்ட் சி மில் தொழிலாளியாகி , தொழிலாளர் போராட்டங்கள் மூலம் நக்சல்பாரி விவசாயப் போராட்டங்கள், சாருமஜூம்தார் தலைமை இவற்றால் ஈர்க்கப்பட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்) ல் தன்னை இணைத்துக் கொண்டவர் தோழர் எஸ் என் என்று அறியப்படும் எஸ். நடராசன் (78).

இந்தியாவின் முதல் தொழிற்சங்கமான எம்எல்யூ வின் பிரபலமான தொழிற்சங்கத் தலைவர்கள் எஸ் சி சி. அந்தோணிப்பிள்ளை, இரா. குசேலர், சிஅய்டியூவின் டபள்யூ ஆர். வரதராஜன் உள்ளிட்டோருடன் பணியாற்றிவர்; சங்கத்தின் பொதுச் செயலாளராக பணியாற்றியவர். பல போராட்ட களங்களைக் கண்டவர் தோழர் எஸ் என்.

இந்திரா சுயேச்சாதிகாரத்தை எதிர்த்து உருவான இந்திய மக்கள் முன்னணியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக செயல்பட்டவர். சிறீலங்கா தமிழர்களின் உரிமைக்கு குரல் கொடுத்து குமரியிலிருந்து சென்னை வரை மக்கள் முன்னணி நடத்திய முற்றுகைப் போர்ப் பயணத்துக்கு தலைமை தாங்கியவர்.

இறுதிக் காலங்களில் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் பேரவையின் தலைவராகவும் மனித உரிமை, பஞ்சமி நில மீட்பு செயல்பாட்டாளராகவும் இருந்தார். தலித் விடுதலை கருத்துகள், அமைப்புகளுடன் நெருங்கி செயல்பட்டவர்.

அவரது திடீர் மறைவால் ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் அவரது மனைவி, பானுமதி, பெண்குழந்தைகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட்) மாநிலக் கமிட்டி, தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**பழ.ஆசைத்தம்பி**
**மாநிலச் செயலாளர்**
**இகக(மா லெ) தமிழ்நாடு**

## தோழர் மனோகருக்கு செவ்வஞ்சலி



கோவை மாவட்ட சிபிஐஎம்எல் கட்சியின் மூத்த தோழரும், டெக்ஸ்டூல் ஏஐசிசிடியு தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவருமான தோழர் மனோகர் உடல் நலக்குறைவின் காரணமாக மரணமடைந்தார். தோழர் கடைசி காலம் வரை கட்சியுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார், தீப்பொறியில் வரும் கட்டுரையை படித்து கருத்து கூறுவார். பாராட்டுவார்.



## தோழர் சிவலிங்கத்திற்கு செவ்வணக்கம்!

இகக(மாலெ) கடலூர் மாவட்டக்குழு உறுப்பினரும், முதுபெரும் தோழருமான சிவலிங்கம் உடல்நிலை சரியில்லாமல் காலமானார். கடலூர் மாவட்டத்தில், பண்ருட்டி வட்டத்தில் கிராமப்புர ஏழைகளை அணிதிரட்டுவதில் தோழர் முனைப்பாக பணியாற்றினார். தோழர் சிவலிங்கத்திற்கு செவ்வஞ்சலி.




## ஏஐசிசிடியு கட்டுமானச் சங்க கொடி ஏற்று நிகழ்ச்சி

தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி அருகே வாகைக்குளத்தில் ஏஐசிசிடியு கட்டுமான தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக கட்டுமான சங்க கொடியேற்றுவிழா மற்றும் அறிவிப்பு பலகை திறப்பு விழா AICWF சங்க கிளைத் தலைவர் பி.முருகன் தலைமையில் நடைபெற்றது. சங்க நிர்வாகிகள்

எஸ். மாயகிருஷ்ணன், டி. பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். சங்க சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் பி.ராமராஜ் சங்கக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட பொதுச்செயலாளர் எம்.வேல்முருகன் அறிவிப்பு பலகையைத் திறந்து வைத்து உரையாற்றினார். கட்டுமான சங்க மாவட்ட பொதுச் செயலாளர் மாதவன், கௌரவத் தலைவர் முருகையா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

தலையங்கம் தொடர்ச்சி...

துணை வேந்தர்களாக நியமித்து, சங்பரிவாரங்களின் இந்துத்துவ பாசிசக் கொள்கைகளை பாடத் திட்டங்களாக மாற்றுவதே இதன் நோக்கம். யுஜிசியின் இந்த விதிகளுக்கு எதிராக, உடனடியாக அவற்றைத் திரும்பப் பெற வேண்டும் என்று கூறி தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்து, தமிழ்நாட்டு மக்களை அவமதிக்கும் விதமாக தமிழ்நாடு சட்டப் பேரவையிலிருந்து ஜனவரி 6ம் தேதி ஆளுநர் ஆர்.என்.ரவி வெளிநடப்பு செய்தார். ஜனவரி 8ம் தேதி மாநில அரசின் அதிகாரத்தை, உரிமையைப் பறிக்கும் விதியை யுஜிசி அறிவித்தது. துணை வேந்தர் நியமனத்தில் மட்டுமின்றி இளங்கலை, முதுகலை பட்டப் படிப்புகளில் கற்கை முறைகளுக்கான குறைந்தபட்ச நெறிமுறைகள் 2024 மற்றும் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கான நெறிமுறைகள் 2025 ஆகியவற்றையும் உருவாக்கியுள்ளது. இது முற்றிலும் புதிய தேசியக் கல்விக் கொள்கை 2020ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். இதுவும் திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்கது. அதேவேளை கல்வியைத் தனியார்மயமாக்கும் விரும்பத்தகாத சில நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்படுவதும் எதிர்ப்புகளைத் தொடர்ந்து அவை பின்வாங்கப்படுவதும் தமிழ்நாடு அரசால் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

# ஏஐசிசிடியு 11-வது அகில இந்திய மாநாடு கோரிக்கை விளக்க கூட்டம்




இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் பகுதியில் வேலு தலைமையில் ஏஐசிசிடியு அகில இந்திய மாநாடு விளக்கக் கூட்டம் நடைபெற்றது.

- தொழிலாளர் விரோத 4 சட்டத் தொகுப்புகளைத் திரும்பப் பெறு!
- மக்கள் விரோத மூன்று குற்றவியல் சட்டங்களைத் திரும்பப் பெறு!
- அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச ஊதியம் ரூ. 35000 நிர்ணயம் செய்!
- ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ஒழித்துக்கட்டி பல லட்சக்கணக்கான நிரந்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கு!

உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் உ.அதியமான் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.




கன்னியாகுமரி




நாமக்கல்



புதுக்கோட்டை




தஞ்சாவூர்





தூத்துக்குடி




சென்னை

செந்தில்



# மார்கழி மக்களிசை; கர்னாடக இசை; சென்னை சங்கமம்

# கலைச் சங்கமத்தின் இசை ஒலியாய் மாறுமா?

தை 1, பொங்கல் நாளன்று சென்னை சங்கமம், நம்ம ஊரு திருவிழா தொடங்கியது. முதலமைச்சர் ஸ்டாலின் முரசடித்து தொடங்கி வைத்தார். தமிழர்களின் பாரம்பரியம், பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியலின் சிறப்புகளை மாபெரும் விழாவாகக் கொண்டாடுவது நோக்கம் என்று அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது. ஏற்கனவே கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அமைப்பாக்கிய நிகழ்ச்சி இதுவாகும். தமிழகத்தின் பல்வகை கலைகளையும் ஒருங்கிணைத்துக் காண்கின்ற வாய்ப்பு சென்னை மக்களுக்கு கிடைத்துள்ளது. அதிமுக ஆட்சி காலத்தில் கைவிடப்பட்டிருந்த சென்னை சங்கமம், திமுக ஆட்சியில் மீண்டும் களை கட்டத் தொடங்கியுள்ளது.

நாட்டுப்புற கலைகளைப் பாதுகாத்து, வளர்த்தெடுக்க வேண்டியது அவசியம். அதேவேளை நாட்டுப்புற கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் வேண்டும். அவர்களின்கலைகளைஉலகளாவியகலையுலக அரங்கிற்கு கொண்டு செல்லவும் வேண்டும். அதற்கு இந்த முயற்சிகள் பயன்படலாம் என்பதால் இதை வரவேற்கலாம்.

மார்கழி இசைக் கச்சேரிகளில் இனிமேல் பாடப் போவதில்லை என பத்தாண்டுகளுக்கு முன்பு அறிவித்திருந்த டி.எம்.கிருஷ்ணா, டிசம்பர் 25 அன்று சங்கீத வித்வத் சபாவில் பல சச்சரவுகளுக்குப் பின் கொண்டாட்டமாகப் பாடினார். பிராமணர்களுக்கானது எனவாகிப் போன கர்னாடக இசையை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்பதே அவரின் போராட்டம். பெரியார், அம்பேத்கரின் கருத்துகளைப் பாடி அவர்களுக்கு எரிச்சலூட்டினார். இயேசு, அல்லா பற்றியும் பாடி அதிர்ச்சி ஏற்படுத்தினார். ஆல்காட் குப்பம் போன்ற சேரிகள், குப்பங்களில் நடத்தப்பட்ட இசைக் கச்சேரிகளுக்குச் சென்று பாடினார். சாதிய ஏற்றத்தாழ்வுகளற்ற சமத்துவம் கர்னாடக இசைப்பரப்புகளில் நிகழ வேண்டும் என்றார். அவரது இசைக்குரல் கலகக் குரலானது.

சென்னை மியூசிக் அகாடெமியால் 2024 ஆம் ஆண்டுக்கான சங்கீத கலாநிதி விருது அவருக்கு வழங்கப்பட்டது. “அவர்கள் என்னோடு உரையாட அழைக்கிறார்கள். அவர்களோடு உரையாடலை நிகழ்த்துவதன் மூலம் எனது போராட்டம் தொடரும்” என்கிறார்.

டிசம்பர் 25, கிறிஸ்துமஸ் அன்று மார்கழி இசைக் கச்சேரியில் பாடிய கிருஷ்ணா, சாரம் அணிந்து வந்து, எழுத்தாளர் பெருமாள் முருகனின் “சுதந்திரம் வேண்டும்” என்ற பாடலைப் பாடினார். அரங்கத்திற்கு உள்ளும் வெளியும் இசை ரசிகர்களின் பெருங்கூட்டம். அவர் பாடலுக்கு எழுந்து நின்று மரியாதை செய்தனர். இந்த ஆதரவு அவரது இசைக்குரலுக்கு மட்டுமல்ல; கலகக் குரலுக்கும் தான் என்பது நிரூபணமானது, மகிழ்ச்சிக்குரியது.

மறுபுறம் மார்கழி மக்களிசை. கடந்த அய்ந்தாண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. திரைப்பட இயக்குனர் பா. ரஞ்சித்தின் நீலம்

பண்பாட்டு மையம் இந்த இசை நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கும் அரிய பணியை செய்து வருகிறது. இதில் ஒடுக்கப்பட்ட, விலக்கி வைக்கப்பட்ட சமூகத்தின் கலைப்பிரவாகம் இசையொலியாய் அதிர்கிறது. அவர்களது வாழ்வை, வாழ்வின் வலியை, துயரத்தை, மகிழ்வை, உழைப்பை எதிரொலிக்கும் இசைக்கு அரங்கேற்றம் நிகழ்ந்து வருகிறது. பறை இசை, ஒப்பாரிப் பாடலிசை உள்ளிட்ட புறக்கணிக்கப்பட்ட மக்களின் இசை சுதந்திரமாகப் பரவிப் பாய்கிறது. “இது சாதாரண இசை நிகழ்ச்சியல்ல; பண்பாட்டுத் தலைகீழாக்கம்; திரும்பச்செய்தல். ஒடுக்கப்பட்ட சமூகத்தின் விழிப்புணர்வுக்கான அடையாளம்” என்கிறார் எழுத்தாளர் ஸ்டாலின் ராஜாங்கம். பாரம்பரிய இசைக் கருவிகள் தாண்டி நவீன இசைக் கருவிகளின் வழியே அம்பேத்கரை பற்றிய பாடல்கள் ஒலிக்கின்றன. முற்போக்கு கருத்துகள், ராப் பாடகர் அறிவு மூலம் கேட்பவர்களை சிந்திக்கத் தூண்டுகின்றன.

எத்தகைய கலைகளும் அன்றைய காலகட்டத்தின் சமூக, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்வாங்கி, வெளிப்படுத்த வேண்டும். அவற்றின் உள்ளடக்கத்திலும் வெளிப்பாட்டு முறைகளிலும் கால மாற்றத்திற்கேற்ப தகவமைதலும் வேண்டும். பிற இரு போக்குகளும் இதனை எதிரொலிக்கும் போது, சென்னை சங்கமம் இந்த அம்சத்தில் பரிணமிக்குமா என்ற கேள்வி எழுகிறது. கலாச்சாரத் தளத்தில் பார்ப்பன மேலாதிக்கத்தை எதிர்த்து கலகம் செய்த திராவிட இயக்கம் அண்மைய காலத்தில் அதிலிருந்து பின்வாங்கி விட்டது. அந்த இடத்தை வேறு பல இயக்கப் போக்குகள் நிறைவு செய்ய முயற்சிக்கின்றன என்பது நல்ல செய்தி. மார்கழி மக்களிசை பற்றி டி.எம்.கிருஷ்ணாவிடம் கேட்கும் போது, “வேறு வேறு கூடைகளில் இருக்கும் இந்த இரு இசைகளும் ஒன்றாக சங்கமிக்க வேண்டும்” என்கிறார். அதுவும் “சம பலத்துடன்” என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார். அவர் சொல்வது முற்றிலும் சரியே.

சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே நிகழும் இந்த கலை விழாக்கள் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் வெள்ளமாகப் பரவிப் பாய வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் பல்வேறு கலைகளும் சமத்துவமாக ஒன்று கலக்க வேண்டும். அவை மக்களின் வாழ்வையும் போராட்டங்களையும் சமத்துவத்தையும் விடுதலையுணர்வையும் வெளிப்படுத்த வேண்டும். அதுவே உண்மையான கலைச் சங்கமத்தின் மக்கள் இசையொலியாக இருக்கும். பேரழிவு பாசிச கலைப் பண்பாட்டுத் தாக்குதலை எதிர்த்துக் களமாடி வீழ்த்த இது மிக மிக அவசியமாகும்.

**_செந்தில்**

**தீப்பொறி சிறப்பு நன்கொடை ரூ 5000/ அளித்துள்ள கடலூர் மாவட்ட தோழர் கார்த்திக்கு வாழ்த்துக்கள்!**

**மேலாளர், தீப்பொறி**


மாலெ தீப்பொறி சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200

தீப்பொறி சந்தாதாரராக QR கோடை ஸ்கேன் செய்யவும்

நன்கொடைகள் தாரீர்



CPIML
LIBERATON

# அரசமைப்புச் சட்டம், குடியரசு

## கார்ப்பரேட்-மதவெறி பாசிசத்திடமிருந்து அரசமைப்புச் சட்டத்தைக் காப்போம்; மதச்சார்பற்ற, சோசலிஸ்ட், ஜனநாயக, குடியரசைக் காப்போம்!

திறந்தவெளி
**கருத்தரங்கம்**

**25-01-2025** மாலை **3.00** மணி
கட்டபொம்மன், பாரதி, வஉசி, வீரன் சுந்தரலிங்கம்
விடுதலைப் போர் விளைந்த மண்
**நெல்லையில்**

**உரை**

தோழர் **பழ. ஆசைத்தம்பி**, தோழர் **பாலசுந்தரம்**, தோழர் **டி.சங்கரபாண்டியன்**
தோழர் **ஜி.ரமேஷ்**, தோழர் **ஆர்.சுசீலா**, தோழர் **எஸ்.எம்.அந்தோணிமுத்து**
தோழர் **மு.முருகன்**, தோழர் **புதியவன்**, தோழர் **எம்.சுந்தர்ராஜ்**
தோழர் **க.கணேசன்**, தோழர் **த.சகாயம்**, தோழர் **வி.அய்யப்பன்**, **செ.கார்மல்**

அனைவரும் வருக!

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ)
## தமிழ்நாடு

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20 .01.2025 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் கொண்டு வரப்பட்டால்...

## விவசாயம், சுற்றுச்சூழல், பண்பாடு ஆகியவற்றிற்கு பாதிப்புகள் என்ன?

மதுரை, சிவங்கை, திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள்,
விவசாயத் தொழிலாளர்கள், ஊராட்சிப் பிரதிநிதிகள், ஆய்வாளர்கள் பங்குபெறும்

## பொதுவிசாரணை

**23.01.2025** காலை 10 மணி
**கிருஷ்ணய்யர் சமூகக் கூடம்,** மதுரை

**வரவேற்புரை:**
**சி.மதிவாணன்**
மாவட்டச் செயலாளர்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ)

**துவக்க உரை:**
**பழ. ஆசைத்தம்பி,**
மாநிலச் செயலாளர்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ)

**நடுவர்கள்:**

**அ.சந்திரமோகன்**
அ.இ.விவ. மகாசபை

**பாலசுந்தரம்**
அ.விவ.கிரா.தொ.சங்கம்

**சாந்தலிங்கம்**
தொல்லியல் ஆய்வாளர்

**பெ.சண்முகம்**
மாநிலத் தலைவர், த.வி.ச

**த.இந்திரஜித்**
மாநில து. செயலாளர், த.வி.ச

**பேரா.முரளி,** மதுரை

**வீ.பிரபாகரன்**
பூவுலகின் நண்பர்கள்

**தீர்மானங்கள்: அ.சிம்சன்**
மாநில அமைப்பாளர், நீதிக்கான மக்கள் இயக்கம்

**அகில இந்திய விவசாயிகள் மகாசபை (AIKM)**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ)**

*அனைவரும் வருக!*

Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh